1990 மே 11] [டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

இதற்குரிய திருத்தப் பகுதியாக கீழ்வருவனவற்றை இணைத்துக் கொள்ள வேண்டுகிறேன். ''ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக நியமிக்கப்பட்ட தேர்வுக் குழுவினரால், உடல் ஊனமுள்ள இவர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் பதவியில் சேர்ந்த நாளிலிருந்து சம்பளம் பெற்றுக்கொள்வதற்குரிய அரசு ஆணை மற்றும் உத்தரவுகளை அரசு பிறப்பித்துள்ளது''.

6. கவன ஈர்ப்பு.

(அ) முண்டந்துறை சரணாலயப் பகுதியில், காணிக்குடியிருப்பில் ஆதிவாசிகளின் பயிர்களும், வீடுகளும் வனத்துறையினரால் அழிக்கப்பெறுவது குறித்து.

திரு. கே. ரவி அருணன்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, ''திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் முண்டந்துறை சரணாலயப் பகுதியில் காணிக்குடியிருப்பில் பல வருடங்களாக சாகுபடி செய்து வந்த ஆதிவாசிகளின் நிலத்தில் உள்ள பயிர்களையும், வீடுகளையும் வனத்துறையினர் அழித்து அவர்களை வெளியேற்ற முயல்வது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

நெல்லை மாவட்டம் முண்டந்துறை சரணாலயப் பகுதியில் இஞ்சுக் குழியில் இருக்கும் ஆதிவாசிகள் 7 நபர்கள் 10—9—1989 இல் வன விலங்குகள் தொந்தரவால் தங்களது விவசாயத்திற்கும் உயிருக்கும் சேதம் ஏற்படுகிறது என்று கூறி 20 ஆண்டுகளுக்கு முன் காணிக்காரர்கள் குடியிருந்த, விவசாயம் செய்த பகுதியில் இடம் ஒதுக்குமாறு கேட்டு, முன்னாள் வனப் பாது காவலர் மற்றும் வன உயிரினக்காப்பாளர் அவர்களிடம் மனு கொடுத்துள்ளார்கள். அதன்படி மேற்கூறிய 7 நபர்களுக்கும் அந்த இடம் கொடுக்கப்பட்டதாக தற்போதுள்ள வன உயிரின தென்மண்டல வனப் பாதுகாப்பாளர் தெரிவித்துள்ளார். இது விஷயமாக ஒரு புகார் கொடுக்கப்பட்டதன் பேரில், திருநெல்வேலி மண்டல வனப் பாதுகாப்பு படையினர் தணிக்கை செய்துள்ளனர். அவர்களிடம் தற்சமயம் வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி புதிதாக இடம் கொடுக்க முடியாது என்று புலிகள் பாதுகாப்பு துணை இயக்குநர் கூறி, அரசு அனுமதி பெற்ற பின்பு தான் புதிய இடத்திற்கு வரவேண்டும் என்று காணிக்காரர்களிடம்

[திரு. கே. பி. கந்தசாமி] [1990 மே 11

கூறியதின் பேரில், அவர்களும், சம்மதித்து இஞ்சுக்குழி பகுதிக்கே திரும்பிச் சென்று விடுவதாக வாக்களித்தார்களென தெரிய வருகிறது.

காணிக்காரர்களுக்கு எந்தவித இடைஞ்சலும் வனத்துறை ஊழியர்கள் செய்யவில்லை எனவும், அவர்களது பயிர் வீடு மற்றும் வயல்களுக்கும் எந்தவித சேதமும் ஏற்படுத்தவில்லை எனவும் ராஜபாளையம் வனப்பாதுகாவலர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். 13–3–1990, 14–3–1990, 15–3–1990, 26–3–1990, 27–3–1990, 28–3–1990 மற்றும் 2–4–1990 முதல் 10–4–1990 வரையில் முண்டந்துறை முகாமில் வனப் பாதுகாவலர் அவர்கள் முகாம் செய்திருந்தார்கள் எனவும், அப்போது கூட காணிக்காரர்கள் எவரும் புகார்கள் எதுவும் தெரிவிக்கவில்லை எனவும் வனப்பாதுகாவலர் தெரிவித்துள்ளார். இது பற்றி மீண்டும் வனப் பாதுகாவலர் அடுத்த முகாமில் விசாரிப்பதாகவும் வாக்களித்துள்ளார்கள், ஆகஸ்திய குடியிருப்பில் இருக்கும் ஆறுமுகம் காணி, ரத்தினம் காணி ஆகியவர்களை விசாரித்ததில் வனத்துறையினர் எங்களுக்கு எந்தவித இடைஞ்சலும் செய்யவில்லை என்றும் பாபநாசம் வனச்சரக அலுவலரிடம் எழுதிக் கொடுத்ததாகத் தெரிகிறது. ஆதிவாசிகள் சமுதாயத்தில் அடிக்கடி ஏற்படும் குடும்பத் தகராறு காரணமாக இதில் சம்பந்தப்படுத்தி புகார் கொடுத்திருக்கலாம் என நம்பப்படுகிறது. கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட விவரங்கள் பொதுவாக இருப்பதால் குறிப்பாக அறிக்கைகளை சமர்ப்பிக்க இயலாமல் உள்ளது. எனினும் நெல்லை மாவட்ட முண்டந்துறை சரணாலயப் பகுதியில் காணி குடியிருப்பில் பல வருடங்களாக சாகுபடி செய்துவந்த ஆதிவாசிகள் நிலத்திலுள்ள பயிர்களையும், வீடுகளையும் அழித்து வனத்துறையினர் அவர்களை வெளியேற்ற முயலுவதாக தெரிவிப்பது ஒரு ஆதாரம் அற்ற புகாராக தெரிய வருகிறது.

திரு. கே. ரவி அருணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிவாசிகளின் புனர்வாழ்வு திட்டத்தின் கீழ் முன் மாதிரியாக இஞ்சுக்குழியில், காணிக்குடியிருப்பு என்ற பகுதியில் வசித்துவந்த 10 குடும்பங்களுக்கு 4–5–1989 அன்று சின்னமைலாறு என்ற இடத்தில் 20 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டு, அந்த இடத்திலிருந்து மரங்களை வனத்துறையினர் வெட்டி எடுத்த பின்பு அங்கே மரச்சீனிக்கிழங்கு போன்றவைகளை பயிர் செய்து அவர்கள் வாழ்க்கை நடத்தி வந்தனர். ஆனால் 15–3–1990 அன்று வன அலுவலர் தலைமையில் வன இலாகா ஊழியர்கள் வேனில் சென்று, அங்கேயுள்ள வேலியை அழித்தும் பயிர்களை நாசப்படுத்தியும், குடிசைகளைப் பிரித்தும் நாசப்படுத்தியுள்ளனர். எந்தவிதமான முன்னறிவிப்பும் இல்லாமல் இது நடைபெற்றுள்ளது. புனர்வாழ்வுத் திட்டம் என்று கூறி ஏற்கெனவே இருந்த இடத்தி

1990 மே 11] [திரு. கே. ரவி அருணன்]

லிருந்து அவர்களைக் குடிபெயர்த்துக் கொண்டு வந்து தற்போது இருக்கும் இடத்திலும் அவர்களுக்குத் தொல்லை கொடுப்பதால் அந்த ஆதிவாசி மக்கள் தாங்கள் ஏமாற்றப்படுகிறோம், வஞ்சிக்கப் படுகிறோம் என்ற நெஞ்சு சுமையோடு எப்போது எது நடக்குமோ என்ற அச்ச உணர்வோடு இருக்கிறார்கள். அவர்கள் உள்ளத்திலே நம்பிக்கை ஏற்படும் வகையிலும், அவர்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதம் தரும் விதத்திலும் அவர்களுடைய மறுவாழ் விற்காக அரசு என்ன நடவடிக்கை எடுத்து உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இதிலே இரண்டு முக்கியமான பிரச்சினை கள் இருக்கின்றன. ஒன்று, ரவி அருணன் அவர்கள் இப்போது என்னிடத்திலே எழுதித் தந்த ஒரு கடிதத்திலே 28—1—1989லேயே ஒரு ஆலோசனைக் கூட்டம் அங்கே நடை பெற்றது என்றும் அந்தக் கூட்டத்திலே புனர் வாழ்வுத் திட்டம் என்ற தலைப்பிலே அந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்று அந்தக் கூட்டத்திலேயிருந்து எடுக்கப்பட்ட முடிவின் காரணமாக 10 குடும்பங்கள் வேறொரு இடத்திற்கு குடிபெயர்க்கப்பட்ட னர் என்றும் சொல்கிறார்கள். இப்படி அங்கே உள்ள தனி அலுவலர் செய்திருந்தால் அது தவறான காரியமாகும். ஏனென் றால் 1980லே போடப்பட்ட சட்டத்திற்குப் பிறகு, மத்திய அரசு கொண்டுவந்த சட்டத்திற்குப் பிறகு Conservation of Forests Act, 1980 அந்தச் சட்டத்திற்குப் பிறகு எந்த வனப்பகுதி யையும் non-Forestry purposes காடுகளல்லாத ஒரு பணிக்காக நாம் மத்திய அரசு அனுமதியில்லாமல் உபயோகிக்க முடியாது. ஆகவே, அவர்களே இன்னொரு இடத்திலே குடியமர்த்தி யிருந்தால், அது வனப்பகுதியாகும். வனப்பகுதியிலே காடுகளை அழித்து, வீடுகளைக் கட்டி அங்கே பயிரிடச் செய்வதற்கு மத்திய அரசு அனுமதி பெறாமல் செய்ய முடியாது. அப்படி செய்து இருந்தால் அது அந்த வன அலுவலருடைய தவறு என்று நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு Forest Protection Force என்ற அளவிலே அங்கே வந்து அதைக் கண்டுபிடித்து அவர்களிடத்திலே பேசி, மீண்டும் பழைய இடத்திற்கே அவர்களை அனுப்பியதாகச் சொல் கிறார்கள். இதிலே ஏதாவது சிக்கல்கள் அல்லது இடைஞ்சல்கள், கஷ்டங்கள் அந்த மலைவாழ் மக்களுக்கு இருக்குமேயானால் அதைப் பேசித் தீர்த்துக்கொள்ளலாம். அவர்கள் குடிபெயர்ந்து சென்றி ருக்கிறார்களே, அந்த இடந்தான் வேண்டுமென்று சொன்னால் மத்திய அரசுக்கு எழுதி, அனுமதி பெற்று அதற்குப் பிறகு அவர் களை அங்கே நாம் குடியமர்த்தலாம்.

TRUTH ALONE TRIUMPHS

10–45 மணி

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முண்டந்துறை வனப் பகுதியில் காணிக் குடியிருப்பில் காணிக்கார குடும்பங்கள் சுமார் 350 குடும்பங்கள் வசித்து வருகின்றார்கள். புனர் வாழ்வுத் திட்டத்தின் அடிப்படையில் ஆகஸ்தியர் காணிக் குடியிருப்புக்கு கிழக்கில், காரையார் மெயின்ரோடுக்குத் தெற்கில், தாமிரபரணி நதிக்கரையோரப் பகுதியில் குடும்பத்திற்கு 5 ஏக்கர் நிலம் வழங்கி, அவர்களுக்கு எந்த பாதிப்பும் இல்லாமல் பாதுகாப்பாக அவர்கள் வாழ்க்கை நடத்த அரசு நடவடிக்கைகளை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, டைகர் புராஜக்ட் என்ற புலிகள் காப்பகம் என்ற பகுதியின் பிரச்சினையாகும் இது. என்றைக்கு நாம் புலிகளை பாதுகாக்க முயற்சிக்கிறோமோ அன்றிலிருந்து புலிகள் அதிகமாகப் பெருகும். அந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கு சற்று ஆபத்து எப்போதும் இருக்கிறது. அப்படி ஆபத்து இல்லாத இடத்திற்குக் குடி பெயர்ந்து செல்கிற அளவுக்கு ஏற்பாடுகளைச் செய்து, போதிய விவசாய நிலங்களையும் கொடுப்பதற்கு மத்திய அரசின் அனுமதி பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) வில்லிவாக்கம் பகுதியில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் முடிவுறாதது குறித்து.

திரு உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை வில்லிவாக்கம் பகுதியில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் முடிவு பெறாத நிலையில் உள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

சென்னை மாநகராட்சியை சார்ந்த வில்லிவாக்கத்திற்கு பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் சென்னைப்பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் இருப்புப்பாதையும், செங்குன்றம் ஏரியிலிருந்து கீழ்ப்பாகத்திற்கு குடிநீர் செல்லும்